**Service and Information Update**

# ப்ராம்ப்ட்டன் நகரமானது நவம்பர் 23 ஆம் தேதியன்று மாகாணத்தின் பழுப்புநிற(அதி தீவிர) ஊரடங்கு நிலைக்குள் நுழைகிறது

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 20, 2020) – நவம்பர் 23, திங்கட்கிழமை அதிகாலை 12:01முதல் பீல் பிரதேசத்தின் ஒரு அங்கமாக இருக்கும் ப்ராம்ப்ட்டன் நகரமானது, ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் *ஒன்ட்டேரியோவை பாதுகாப்பாகவும் திறந்தை நிலை கட்டுக்கோப்புக்குள் வைப்பதற்காக*, பழுப்புநிற (அதி தீவிர) ஊரடங்கு நிலைக்குள் நுழையும்.

**ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் பழுப்புநிற (அதி தீவிர) ஊரடங்கு நிலை**

மாகாணத்தின் பழுப்புநிற (அதி தீவிர) ஊரடங்கு நிலையில் கீழ்க்காணும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் கட்டுப்பாடுகளும் அடங்கும்:

***ஒழுங்கமைக்கப்பட்ட பொது நிகழ்வுகள், சமூகரீதியாக கூடுதல் மற்றும் மதரீதியான சேவைகள், சடங்குகள், வைபவங்கள்***

- ஒரே வீட்டினுள் வசிப்பவர்கள் தவிர்த்து, எந்தவிதமான பொது நிகழ்ச்சிகள் அல்லது சமூகத்தினர் கூடும் நிகழ்ச்சிகள் கூடாது. மூத்த குடிமக்கள் உள்ளிட்ட தனித்து வாழும் தனி நபர்கள் ஒரே ஒரு மற்ற நபருடன் மட்டுமே தொடர்பு வைத்துக்கொள்ளலாம்.;
- திறந்த வெளியில் பொது நிகழ்ச்சிகள் அல்லது சமூகத்தினர் கூடும் நிகழ்ச்சிகளில் அதிகபட்சமாக 10 நபர்கள் மட்டுமே கூடலாம்.;
- சமூக விலகலைக் கடைப்பிடிக்க ஏதுவான திருமண நிகழ்ச்சிகள், இறுதி காரியங்கள், மத வழிபாடுகள், சடங்குகள் வைபவங்களில், கட்டிடங்களுக்கு உள்ளாகவும் 10 பேர் மட்டுமே, மற்றும் திறந்த வெளியிலும் 10 பேர் மட்டுமே கூடலாம்.

***வணிக அமைப்புக்கள்***

- பல்பொருள் சிறப்பு அங்காடிகள், மளிகைக் கடைகள், மருந்தக கடைகள், வன்பொருள் கடைகள், தள்ளுபடி மற்றும் மளிகைப் பொருட்கள், பீர், ஒயின் மற்றும் மதுபானக் கடைகள், பாதுகாப்பு பொருள் விநியோகக் கடைகள் போன்ற இந்த சில அமைப்புகள் தவிர்த்து, பிற சில்லறை விற்பனை கடைகள் திறந்திருக்க அனுமதிக்கப்படுகின்றன; இவற்றில் 50 சதவீத கொள்திறனுக்கு மட்டுமே ஆட்கள் இருக்கலாம்; ஆனால் பொருட்களை போகிற போக்கில் ஜன்னலோரமாக/வாசலில் விட்டுச்செல்லும் எடுத்துச்செல்லும் வசதி மட்டுமே கொடுத்து திறந்திருக்கலாம்;

- உணவகங்கள், மது பார்கள் மற்றும் உணவு மற்றும் பானம் நிறுவனங்கள் வெளியில் எடுத்துச்செல்லக்கூடிய, வாகனத்தில் இருந்தபடி வாங்கிக்கொள்ளக்கூடிய டெலிவரி மட்டுமே வழங்கலாம். உட்புற மற்றும் திறந்தவெளி உணவு பரிமாறும் சேவைகள் தடைசெய்யப்பட்டுள்ளன;
- முடிதிருத்துகின்ற மற்றும் முடி அலங்காரம் செய்கின்ற நிலையங்கள் மற்றும் பச்சை குத்திக்கொள்ளும் பார்லர்கள் உள்ளிட்ட தனிப்பட்ட பராமரிப்பு சேவைகள் மூடப்படுகின்றன;
- கேசினோக்கள், பிங்கோ அரங்குகள் மற்றும் பிற விளையாட்டு நிறுவன அமைப்புக்கள் மூடப்படுகின்றன;
- நீச்சல் குளங்கள் உள்ளிட்ட உட்புற விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுடன் மூடப்படுகின்றன.

***பள்ளிகள் மற்றும் குழந்தை பராமரிப்பு***

- பள்ளிகள், பள்ளி நேரத்துக்கு முந்தைய மற்றும் பிந்தைய சிறப்பு வகுப்புகள், குழந்தை பராமரிப்பகங்கள் திறந்தபடி இருக்கும்;
- மருத்துவ பயிற்சி அல்லது வர்த்தகம் தொடர்பான பயிற்சி போன்ற நேரில் மட்டுமே வழங்கக்கூடிய பயிற்சிக்கான பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கும்: உயர்நிலைப் பள்ளிக்கு இந்த அடுத்த நிலைப் பள்ளிகள், சில வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுடன் இயங்கும்.

மாகாணத்தின் சுகாதார நடவடிக்கைகள் பற்றி இங்கே மேலும் படியுங்கள்

***நகரத்தின் சேவைகள் மற்றும் கட்டிடங்கள்***

***நகரின் அரங்கம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள்***

நகரின் அரங்கம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள், நபருக்கு-நபரான சேவைகளுக்கு முன்பதிவின் பேரில் மட்டுமே திறந்திருக்கும். போகிறபோக்கில் நுழைய அனுமதியில்லை. முன்பதிவு செய்துகொள்ள வருகை தரவும்: www.brampton.ca/skiptheline.

***நகரின் பொழுதுபோக்கு மையங்கள்***

நவம்பர் 23, 2020, தொடங்கி அனைத்து ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து பொழுதுபோக்கு கட்டிடங்களும் பொதுமக்கள் உபயோகிக்க அனுமதியில்லாமல் மூடப்படும். உடற்தகுதியுடனும் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கு ஆன்லைன் வீடியோக்கள் பார்க்க இங்கு க்ளிக் செய்யவும்

**முகத்திரைகள் கட்டாயம்**

கட்டாய முகத்திரைகள் உப சட்டத்தின் கீழாக, ப்ராம்ப்ட்டனில் உள்ள அனைத்து கட்டிடங்களின் உட்புற பொது இடங்களிலும் மருத்துவம் அல்லாத முக கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணியத் தேவைப்படுகின்றன. பொது நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்

இருக்கின்ற கட்டிடங்களின் உட்புற பொது இடங்களில் முக கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணியப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மருத்துவ காரணங்களால் முகக் கவசம் அல்லது முக திரையை அணிய முடியாதவர்கள் உள்ளிட்ட இந்த சில நபர்களுக்கு உப சட்டம் விலக்கு அளிக்கிறது:- இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள்; அவசர உத்தரவுகளின் பேரில் தடகள விளையாட்டு நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள். மேலும் தகவலுக்கு, வருகை புரியவும்: www.brampton.ca/masks

மேலும் தகவல்களுக்கு மற்றும் சேவைக்கான வேண்டுகோள்களுக்கு, குடியிருப்புவாசிகளும் வணிகர்களும் 311 என்ற எண்ணை அழைக்கலாம், www.311brampton.ca க்கு வருகை புரியலாம் அல்லது 311 மொபைல் செயலியை உபயோகிக்கலாம்.

**லின்குகள்**

**இவை பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்:**

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 நிகழ்ச்சிகள் அமைத்தல் மற்றும் சேவை பற்றிய புதுத் தகவல்கள் (City of Brampton COVID-19 programming and service updates)
- ப்ராம்ப்ட்டன் நகரம் – என்னவெல்லாம் திறந்திருக்கும், என்னவெல்லாம் மூடியிருக்கும் (City of Brampton – what's open, what's closed)
- கோவிட் 19 அறிகுறிகள் (COVID-19 Symptoms)
- ப்ராம்ட்டனில் சோதனை செய்துகொள்ளுதல் (Testing in Brampton)
- தனக்குத்தானே தனிமைப்படுத்திக்கொள்ளுதல் (How to self-isolate)
- கோவிட்-19 சமயத்தில் வணிகங்கள் மற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)
- பீல் பிரதேசத்தில் கோவிட்-19 தொற்று நிகழ்வுகள் (Cases of COVID-19 in Peel)

**அறிஞர் கூற்று**

"நமது குடியிருப்பாளர்கள், வணிகர்கள் மற்றும் உள்ளூர் வளர்ச்சியில் பங்கெடுப்பவர்களுக்கு, திட்டங்கள் மற்றும் சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதற்காக நகரம் முழுவதும் உள்ள எங்கள் குழுவினர், அயராமலும் விடாமுயற்சியுடனும் பணியாற்றியுள்ளனர். வீட்டிலிருந்து வேலை செய்ய வாய்ப்பில்லாத எங்கள் அத்தியாவசிய மற்றும் சிக்கலான தொழில் செய்பவர்களின் உழைப்பை ஆமோதித்து, அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் நான் விரும்புகிறேன்; அவர்கள் நமது நகரத்தை பாதுகாப்பாக கொண்டு செல்ல ஒவ்வொரு நாளும் தொடர்ந்து பனியாற்றியுள்ளனர். பலருக்கும்

இது மிகவும் சவாலான நேரம் என்றாலும், நமது சமூகம் தாக்குப்பிடிக்கும் தன்மையானது என்பதை நான் அறிவேன், அவர்களுடன் ஒன்றிணைந்து இன்னும் வலுவுடன் நாம் மீண்டு வருவோம்."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905.874.3426 | Monika.Duggal@brampton.ca